2016 பிப்ரவரி 20]

என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

போக்குவரத்துப் பணிமனை

***53910—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, ஒத்தக்கடையில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதுக்குளம் மற்றும் சிப்காட் புதூர் பகுதிகளில் பணிமனைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்தக்கடை பகுதியில் புதிய பணிமனை கேட்டிருக்கிறார்கள். போதிய பயணிகள் அடர்வு இல்லாத காரணத்தினால், ஒத்தக்கடை பகுதியில் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன், சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. கா. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், விவசாயிகளின் விடிவெள்ளி, ஒட்டு மொத்த தமிழினத்தின் பாதுகாவலர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளில், கிழக்கு தொகுதியில் மட்டும்தான் பணிமனை கிடையாது. மீதி 5 தொகுதிகளிலும் பணிமனை இருக்கின்றது. எனவே, மதுரை மாவட்டம், கிழக்கு*

தொகுதி, ஒத்தக்கடையில் பணிமனை அமைப்பது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்குகின்றேன்.

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை இந்த சட்டமன்றத்தில் அமரச் செய்து அழகு பார்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 68–வது பிறந்த நாள், உலகமெங்கும் கொண்டாடப்படும் பிறந்த நாள். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளையும் வெல்வோம் வெல்வோம், வெல்வது நிச்சயம் என்று சொல்லி நன்றி கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

101—

மரக்கன்றுகள் நடுதல்

***53870—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, அடையாறு மத்திய கைலாசம் முதல் பழைய மகாபலிபுரம் சாலையின் இருமருங்கிலும் வனத் துறை மூலமாக மரக் கன்றுகள் நடுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிட, நித்தம் நித்தம் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை வாரிக் கொடுத்து, நான்கரை ஆண்டுகளில் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாக உருவாக்கி, சரித்திரச் சாதனை படைத்த எங்கள் குல தெய்வம், ஒட்டுமொத்த தமிழர்களின் காவல் தெய்வம்,